


# இயேசுவின் ஊழியத்தில் ஒருநாள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மாற்கு 1:16–45; யோவான் 1:29–42; மாற்கு 5:41; லூக்கா 6:12; லேவி 13.

**மனன வசனம்:** 'இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்'. மாற்கு 1:17.

ஒவ்வொரு சுவிசேஷப் புத்தகமும் இயேசு ஊழியத் துவக்கத்தை தனக்கே உரிய விதத்தில் அறிமுகப்படுத்துகிறது.

மத்தேயுவில்,இயேசு தம் சீடர்களை அழைத்தது, பிறகு மலைப்பிரசங்கம் பண்ணினது ஆகியவற்றுடன் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது.

லூக்காவில், நாசரேத் ஜெபாலயத்தில் இயேசு முதல் பிரசங்கத்தைச் செய்ததுடன் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது.

யோவானில், இயேசு முதன்முதலாக சீடர்கள் சிலரை அழைத்தது, கானா ஊர் திருமணத்தில் முதல் அற்புதத்தைச் செய்தது ஆகியவற்றுடன் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது.

மாற்குவில், இயேசு நான்கு சீடர்களை அழைத்தது, கப்பர்நகூமில் ஓய்வுநாள் அனுபவம் , அதைத் தொடர்ந்த நிகழ்ச்சி ஆகியவற்றுடன் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது.

"இயேசுவுடன் ஓய்வுநாள்" பற்றி மாற்குவின் துவக்கத்தில் பார்க்கிறோம்; அதிலிருந்து அவர் யாரெனப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த வாரப்பாடப் பகுதி முழுவதிலும், அவரது வார்த்தைகள் சிலவற்றையே பார்க்கிறோம்.: சீடத்துவத்திற்கு அவர் கொடுத்த சுருக்கமான அழைப்பு, பிசாசுக்குக் கட்டளையிட்டது, பிற இடங்களுக்கும் செல்லத் திட்டமிட்டது, ஒரு குஷ்டரோகியைக் குணமாக்கி அவன் சுகமானதை ஆசாரியனிடம் காட்டும்படி கட்டளையிட்டது போன்றவை. அவரது செயல்கள், குறிப்பாக, அவர் மக்களைக் குணமாக்கியது வலியுறுத்தப்படுகின்றன. இயேசுவின் ஊழியத்தின் வேகத்தை எடுத்துக்காட்டுகிற வகையில் உடனே என்கிற வார்த்தையை இந்தச் சுவிசேஷ எழுத்தாளர் பயன்படுத்துகிறார்.

*2024 ஜூலை 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ‘‘என் பின்னே வாருங்கள்’’

**இயேசு அழைத்த சீடர்கள் யார்? அழைத்ததும் அவர்கள் செய்தது என்ன? மாற்கு 1:16-20.**

மாற்கு 1இல், இயேசுவின் வார்த்தைகள் அதிகம் இல்லை. ஆனாலும், இரண்டு மீனவர்களிடம் இயேசு பேசின வார்த்தைகள் மாற்கு 1:17இல் உள்ளன; அவர்களில் ஒருவர் சீமோன்; பின்னர் ‘‘பேதுரு’’ என்று அழைக்கப்பட்டவர்; இன்னொருவர் அவரது சகோதரர் அந்திரேயா. இருவரும் கலிலேயக் கரையில் நின்று, மீன் வலையைப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் படகோ, பிற மீன்பிடி சாதனங்களோ இருந்ததாக குறிப்பு இல்லை; எனவே இருவரும் பொருளாதார ரீதியில் சற்று பின்தங்கியவர்களாக இருக்கவேண்டும். மாற்கு1:19,20இல், யாக்கோபும் யோவானும் தங்கள் தகப்பனோடும் வேலைக்காரர்களோடும் படகில் இருக்கிறார்கள்; எனவே பேருது - அந்திரேயாவைவிட பொருளாதார ரீதியில் வசதியாக இருந்திருக்கிறார்கள். பேதுருவிடம் ஒரு படகு இருந்ததாக லூக்கா குறிப்பிடுகிறார்; யாக்கோபும் யோவானும் பேதுருவுக்கும் அந்திரேயாவுக்கும் தொழில் கூட்டாளிகளாக இருந்திருக்கிறார்கள். லூக்கா 5:1-11. ஆனால் அந்த இரண்டு ஜோடி சகோதரர்களுக்கும் இடையே இருந்த வித்தியாசத்தை மாற்கு சுவிசேஷம் சொல்கிறது; பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களையும், நல்ல நிலையில் இருந்தவர்களையும் இயேசு சீடத்துவத்திற்கு அழைக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுவதாக இது இருக்கலாம்.

இயேசுவின் அழைப்பு நேரடியான, தீர்க்கதரிசன ரீதியான அழைப்பாக இருந்தது. தம்மைப் பின்பற்றும்படி, அதாவது தம் சீடர்களாகும்படி அழைக்கிறார். அவர்கள் தம் அழைப்புக்கு இணங்கினால், அவர்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக மாற்றுவது தம் வேலை என்கிறார்.

**அவர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, உடனடியாக இயேசுவை ஏன் பின்பற்ற விரும்பினார்களென யோசித்துப் பாருங்கள். மாற்கு 1:16-20.**

அதை நன்றாகப் புரிந்துகொள்ள யோவான் சுவிசேஷம் உதவுகிறது. யோவான் 1:29-42. அந்தச் சகோதரர்கள் யோவான் ஸ்நானனின் சீடர்கள்; அவர் இயேசுவைப்பற்றி, ‘‘உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி’’ என்று பிரசங்கிப்பதைக் கேட்டார்கள். யோவான் 1:29. அவர்கள் இயேசுவைச் சந்தித்து, யோர்தான் நதியில் அவரோடு இருந்தார்கள். எனவே ஊழியத்திற்கு இயேசு அழைத்ததும் வேடிக்கைக்காக அல்லது கிளர்ச்சிக்காக அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நன்றாக யோசித்து, அந்த முடிவை எடுத்தார்கள்.

ஆனால் மாற்கு ஏன் அதைப்பற்றி அதிக விளக்கம் கொடுக்கவில்லை? இயேசுவின் வல்லமையை வலியுறுத்துவதற்காக இருக்கலாம். அவர் அழைக்கிறார்; அந்த மீனவர்கள் இணங்குகிறார்கள்; அது அவர்களது வாழ்க்கையிலும் உலகத்திலும் வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது.

---

**இயேசுவைப் பின்பற்ற எதை விட்டுக்கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்? (உங்கள் பதிலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட விஷயங்களை எல்லாம் யோசியுங்கள்).**

---

# மறக்கமுடியாத ஆராதனை

**கப்பர்நகூம் ஜெபாலயத்தில் நடந்ததும் மறக்கமுடியாததுமான அனுபவம் என்ன? மாற்கு 1:21-28. இந்தச் சம்பவத்திலுள்ள ஆவிக்குரிய உண்மைகள் என்ன?**

பல கிறிஸ்தவர்களுக்கு தங்கள் மறக்கமுடியாத, வாழ்க்கையை மாற்றின சில கிறிஸ்தவ அனுபவங்கள் இருக்கும்; உதாரணமாக, இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்த அனுபவம்; ஞானஸ்நானம் பெற்ற அனுபவம்; தேவ பிரசன்னத்தை ஆழமாக உணருவதற்கு உதவிய ஏதாவது பிரசங்கம் போன்றவை.

கப்பர்நகூமில் அந்த ஓய்வுநாளில் ஒரு சிலருக்கு அப்படித்தான் இருந்தது. மாற்கு 1.'அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்'. மாற்கு 1:22. இயேசு போதித்த வேளையில், பிசாசு பிடித்த ஒருவன், அதால் தாக்கமடைந்து, 'ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்' என்று சத்தமிட்டான். மாற்கு 1:24. இயேசு அந்தப் பிசாசை விரட்டினார்.

பிசாசு பேசின அந்த வார்த்தைகளின் அர்த்தங்களை யோசியுங்கள்.

முதலாவது, அந்தப் பிசாசு இயேசுவை, 'தேவனுடைய பரிசுத்தர்' என்று சொல்கிறது. இயேசு தேவனுடைய பரிசுத்த தூதுவர், சாத்தானுடைய தீட்டானதும் பரிசுத்தமற்றதுமான சேனையைச் சேர்ந்த ஒருவரல்ல என்பதை ஒத்துக்கொள்கிறது. ஆராதனை என்றால், அங்கே பரிசுத்தமான விஷயங்களையும் நபர்களையும்தான் எதிர்பார்ப்போமே தவிர, பரிசுத்தமற்ற, தீட்டான விஷயங்களை அல்ல. எனவே இச்சம்பவத்தில் நன்மையின் படைகளுக்கும் தீமையின் படைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வித்தியாசம் காட்டப்படுகிறது. மாபெரும் போராட்டத்தின் நிஜத்தைக் காணமுடிகிறது. இயேசு யார் என்று மக்களுக்கு இன்னும் தெரியாமல் இருக்கலாம், ஆனால், பிசாசுக்குத் தெரிந்திருந்தது; அறிக்கையிடுகிறது.

அடுத்து, அவனை விட்டுப் புறப்பட்டுப் போக அவர் கட்டளையிட்டதில் அர்த்தமிருக்கிறது; 'பேசாமல்' போகும்படி ஏன் சொன்னார்? மாற்கு புத்தகத்தில், இங்கேயிருந்து ஒரு முக்கியமான கருத்து வலியுறுத்தப்படுகிறது; தாம் யார் என்பது குறித்து அமைதியாக இருக்கும்படி இயேசு சொல்கிறார். அறிஞர்கள் இதை ''மேசியத்துவ இரகசியம்'' என்று சொல்கிறார்கள்.

இயேசு பேசாமல் இருக்கும்படி சொன்னதில் அர்த்தமிருக்கிறது; அவரது காலத்தில் மேசியாகுறித்த அர்த்தம்புரியாத எதிர்பார்ப்புகள் நிலவின. மேசியாவாக இருப்பதில் ஆபத்து இருந்தது. பேசாமல் இருக்கும்படி சொன்னாலும்கூட, இயேசுவைப்பற்றின வெளிப்பாடுகள் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தன. எனவே, காலப்போக்கில் இயேசுவின் அடையாளம் மறைக்க முடியாத அளவுக்கு மாறும்; அவர் யாரென்கிற சத்தியம் சுவிசேஷச் செய்தியின் மையமாகும். இயேசு யாரென்பதை மக்கள் அறிந்தால்மட்டும் போதாது; அவரது வருகையின் அர்த்தத்தையும், அதனால் தங்களுக்குள்ள பயனையும் உணர்ந்து தீர்மானமும் செய்யவேண்டும்.

---

**மற்றவர்களுக்குச் சாட்சிப்பகர முயலும்போது, 'தற்கால சத்தியம்' பற்றி நாம் நம்புகிற அனைத்தையும் சொல்லாமல் இருப்பது எப்போது விவேகமாக இருக்கும்?**

# அதிக ஓய்வுநாள் ஊழியம்

**பேதுருவின் குடும்பத்தாருக்கு இயேசு செய்த உதவி என்ன? மாற்கு 1:29-34. இந்தச் சம்பவத்திலுள்ள ஆவிக்குரிய பாடங்கள் என்ன?**

ஜெபாலய ஆராதனை முடிந்து, இயேசு தமது சீடர்கள் சிலருடன் (பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான்) பேதுருவின் வீட்டிற்குச் செல்லுகிறார்; எல்லாரோடும் சேர்ந்து சாப்பிட்டு, அந்நியோந்நியமாக அந்த ஓய்வுநாளைக் கழிக்க, அவர் திட்டமிட்டிருக்கலாம்.

ஆனால் அங்கே ஒரு சிறிய பிரச்சினை; பேதுருவின் மாமி ஜுரத்தால் அவதிப்படுகிறார்; அந்நாட்களில் அந்நோய் வந்தால், ஒன்று குணமாகும் அல்லது மரித்துவிடுவார்கள். அவளைப்பற்றி இயேசுவிடம் சொன்னதும், இயேசு பேதுருவினுடைய மாமியின் கரத்தைப் பிடித்து, எழுப்பிவிடுகிறார். உடனடியாக அவள் எழுந்து, அவர்களுக்கு பணிவிடை செய்கிறாள். இயேசுவால் இரட்சிக்கப்பட்டு, குணமடைந்தவர்கள் அதன் விளைவாக மற்றவர்களுக்கு ஊழியம்செய்வார்கள் என்கிற நியதிக்கு எவ்வளவு வல்லமையான எடுத்துக்காட்டு!

மாற்குவின் சுவிசேஷம் முழுவதிலும் பெரும்பாலும் இயேசு வியாதியஸ்தர்களைத் தொட்டு குணமாக்கியிருக்கிறார். மாற்கு 1:41; 5:41); தொடாமல் குணமாக்கிய சம்பவங்களும் உள்ளன. மாற்கு 2:1-12; 3:1-6; 5:7-13.

அன்று அத்தோடு இயேசுவின் ஊழியம் முடியவில்லை. சூரியன் அஸ்தமித்த போது, இயேசுவிடம் சுகம்பெறும்படி அநேகர் பேதுருவின் வீட்டிற்கு வந்தார்கள். அன்று ஜெபாலயத்தில் நடந்ததைப் பார்த்து அல்லது கேள்விப்பட்டு வந்திருக்கலாம். ஓய்வுநாள் வேளை முடியுமட்டும் மக்கள் காத்திருந்தார்களென ஆசிரியர் குறிப்பிடவில்லை; ஏனென்றால் ஓய்வுநாளைப் பற்றி அறிந்திருந்த வாசகர்களுக்குத்தான் அவர் எழுதினார். மாற்குப் புத்தகத்தின் இந்த அம்சம், அவரது வாசகர்கள் ஓய்வுநாளைக்கைக்கொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது.

சூரியன் அஸ்தமித்த போது, அந்தப் பட்டணத்தார் முழுவதும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடினதாக மாற்கு சொல்கிறார். மாற்கு 1:33. அவர்கள் அனைவருக்கும் தேவையான உதவிகளைச் செய்ய இயேசுவுக்கு நேரம் எடுத்திருக்கும்.

'மணிக்கணக்காக, வருவதும் போவதுமாக இருந்தார்கள்; ஏனென்றால் குணமாக்குகிறவர் நாளைக்கு தங்கள் மத்தியில் இருப்பாரா என்று யாருக்கும் தெரியவில்லை. கப்பர்நகூம் இதற்குமுன் இப்படியொரு நாளைப் பார்த்ததே இல்லை. விடுதலைபெற்றவர்களின் ஆராவாரமும் வெற்றிக்கூச்சலும்தான் ஆகாயத்தில் நிறைந்திருந்தது. தாம் உண்டாக்கிய அந்தப் பேரானந்தத்தில் இரட்சகர் மகிழ்ந்தார். தம்மிடம் வந்தவர்களின் உபத்திரவங்களைக் கண்டபோது, அவர் உள்ளம் பரிதாபம் கொண்டது; அவர்களைக் குணமாக்கி, மகிழ்ச்சியாக்குகிற தம் வல்லமையில் மகிழ்ந்தார். "கடைசி நபர் குணமாகிற வரையிலும் இயேசு தம் வேலையை நிறுத்தவில்லை. அந்தக் கூட்டத்தினர் எல்லாரும் செல்வதற்கு இரவு வெகுநேரம் ஆகிவிட்டது; சீமோனின் வீடு அமைதியானது. அந்த நீண்ட, பரபரப்பான நாள் கடந்தது; இயேசு இளைப்பாற விரும்பினார். ஆனால் அந்த நகரமே தூங்கிக் கொண்டிருக்க, இரட்சகர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.'
—Ellen G. White, The Desire of Ages, p. 259.

# இயேசுவினுடைய ஊழியத்தின் இரகசியம்

**இயேசு செய்தவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்கிற பாடங்கள் என்ன? மாற்கு 1:35-39.**

இயேசு அதிகாலையிலேயே எழுந்து, அமைதியான, வனாந்தரமான ஓர் இடத்திற்குப்போய், ஜெபம்பண்ணினார். இயேசு ஜெபித்த செயலை வலியுறுத்தி மாற்கு 1:35 பேசுகிறது. கிரேக்க மொழியில், அந்த வாக்கியத்திலுள்ள மற்ற அனைத்து வினைச்செயல்களும் 'எழுந்தார், புறப்பட்டார், போனார்' என முற்றுப்பெற்ற வினைவடிவத்தில் உள்ளன. ஆனால், ''ஜெபம்பண்ணிக்கொண்டு'' என்கிற வினைச்சொல் மட்டும் முற்றுப்பெறாத வடிவத்தில் உள்ளது; தொடர்ந்து நிகழ்கிற ஒரு செயலைக் குறிப்பிடுவதற்கு அவ்வாறு சொல்வதுண்டு. அவர் ஜெபித்துக்கொண்டே இருந்தார். மேலும், இயேசு எவ்வளவு சீக்கிரமாக ஜெபிக்கச் சென்றாரென்றும் வசனம் சொல்லுகிறது; எனவே, அவர் ஜெபநேரம் நீண்ட நேரமாக இருந்ததும் புரிகிறது.

சுவிசேஷப் புத்தகங்கள் முழுவதிலும், இயேசு ஒரு ஜெப வீரராகக் காட்டப்படுகிறார். மத் 14:23; மாற்கு 6:46; யோவான் 17. இயேசுசெய்த ஊழியத்தின் வல்லமைக்கு இது முக்கிய இரகசியமாக இருந்தது.

**இயேசுவின் ஜெபவாழ்க்கைபற்றி லூக்கா 6:12 என்ன சொல்கிறது?**

பல கிறிஸ்தவர்கள் ஜெபம்பண்ண நேரம் நியமித்திருக்கிறார்கள். அந்த நடைமுறை நல்லது, சரியானது; ஆனால் அது ஒரு வழக்கமான செயலாக, எந்திரத்தன்மைச் செயலாக மாற வாய்ப்புள்ளது. அத்தகைய அச்சுக்குள் சிக்காமல் இருக்க ஒரு வழி, ஜெப நேரத்தை மாற்றுவது, அல்லது சில சமயங்களில் வழக்கத்தைவிட அதிக நேரம் ஜெபிப்பதுமாகும். மாற்றமுடியாத ஒரு சடங்குக்குள்ளாகச் சிக்கிவிடாதீர்கள் வலியுறுத்துகிறோம்.

பேதுருவும் அவரது நண்பர்களும் இயேசுவோடு சேர்ந்து ஜெபிக்க, அந்த இடத்திற்குச்செல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு அந்த இடம் தெரிந்திருந்தது; ஏனென்றால், அவரைத் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள். எல்லாரும் இயேசுவைத் தேடுகிறார்களென அவர்கள் சொன்னது, முந்தின நாளைப்போல, அவர் அதிகமாக குணமாக்குவதையும் போதிப்பதையும் எதிர்பார்த்ததைக் காட்டுகிறது. ஆனால் இயேசு சம்மதிக்கவில்லை; வேறு இடங்களிலுமிருந்த பரந்த களத்தைச் சுட்டிக்காட்டுகிறார். 'அவர்களை அவர்நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்(றார்)'. மாற்கு 1:38.

**இயேசுவே ஜெபத்தில் அதிக நேரம் செலவிட அவசியம் இருந்திருந்தால், நாம் எப்படி, எவ்வளவு நேரம் ஜெபத்தில் செலவிடவேண்டும்? இயேசுவின் முன்மாதிரி நமக்கு வலியுறுத்துவது என்ன?**

# இரகசியத்தைக் காப்பாற்ற உங்களால் முடியுமா?

**மாற்கு 1:40-45 வசனங்கள், இயேசுவைப்பற்றியும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களை அவர் அணுகினது பற்றியும் என்ன சொல்கின்றன?**

---

---

இந்த வேதப்பகுதியிலும், பழைய ஏற்பாடுமுழுவதிலும் வருகிற குஷ்டரோகம் என்கிற வார்த்தை, இன்று நாம் பார்க்கிற தொழுநோய் அல்ல. இந்த வார்த்தையை 'கொடிய சரும நோய்' என்று மொழிபெயர்த்திருந்தால் சரியாக இருக்கும்; அது, மேல்தோல் சம்பந்தப்பட்ட பிற நோய்களையும் உள்ளடக்கியது. தொழுநோயானது பண்டைய கிழக்கத்திய பகுதிகளில் சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்தான் வந்திருக்கவேண்டும். எனவே, இந்த வேதப்பகுதியில் வருகிற குஷ்டரோகிக்கு தொழுநோய் இருந்திருக்கலாம்; அவன் எப்படிப்பட்ட நோயால் அவதிப்பட்டான் என்று தெரியவில்லை; ஆனால் அது கொடிய நோயாக இருந்தது.

இயேசு தன்னைச் சுகமாக்கமுடியுமென அந்தக் குஷ்டரோகி விசுவாசித்தான். லேவி 13இன்படி, ஒரு குஷ்டரோகி, சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவன்; மற்றவர்களுடனான தொடர்பைத் தவிர்க்கவேண்டும். லேவி 13:45,46.

ஆனாலும் இயேசு அவன்மேல் மனதுருகி, அவனைத் தொடுகிறார். 'இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்'. மாற்கு 1:41. அவனைத் தொட்டதால், அன்று சாயங்காலம் வரை இயேசு தீட்டுப்பட்டிருக்க வேண்டும்; பிறகு, குளித்து, சடங்காச்சார ரீதியாகச் சுத்தமாகவேண்டும். லேவி 13-15. ஆனால் இயேசு அந்தக் குஷ்டரோகியைத் தொட்டதால், அவன் குணமானதாக மாற்கு சொல்கிறார். எனவே, அந்த மனிதனைத் தொட்டதால், இயேசு தீட்டுப்படவில்லை.

ஆசாரியனிடம் சென்று காட்டுமாறும், அத்தகைய நிலையில் மோசே கட்டளையிட்டிருந்த பலிகளைச் செலுத்துமாறும் இயேசு அவனிடம் சொன்னார். லேவி 14. மாற்குவின் சுவிசேஷம் முழுவதிலும், மோசேயின் போதனைகளை இயேசு ஆதரித்துப் பேசுவதைக் காணலாம். மாற்கு 7:10; 10:3, 4; 12:26, 29-31. மதத்தலைவர்களிடம் இதற்கு எதிரான ஒரு பார்வை காணப்பட்டது; மோசே மூலம் கொடுக்கப்பட்ட போதனைகளை அவர்கள் புரட்டினதை மாற்கு 7; 10; 12 அதிகாரங்களிலுள்ள வசனங்களில் காணலாம். இயேசு தன்னைக் குணமாக்கினதாக அவன் சொல்லியிருந்தால், இயேசுவின் மீதான கருத்துவேறுபாட்டால் ஆசாரியன் தவறான தீர்ப்பை வழங்கியிருப்பான்;அதனால்தான், மாற்கு 1:44 இல், அதை யாரிடமும் சொல்லவேண்டாமென இயேசு அவனிடம் சொன்னார்

ஆனால் குணமாக்கப்பட்ட குஷ்டரோகிக்கு அதெல்லாம் புரியவில்லை; இயேசு சொன்னதற்குக் கீழ்ப்படியாமல், எல்லா இடங்களிலும் அந்தச் செய்தியைப் பரப்புகிறான்; அதனால் அந்தப் பட்டணத்தில் இயேசு வெளிப்படையாக ஊழியம்செய்ய செல்லமுடியாமல் போகிறது.

---

**நம்முடைய நோக்கங்கள் எவ்வளவுதான் நல்லவையாக இருந்தாலும், சுவிசேஷம் பரவுவதற்கு தடையாக இருக்கிற விஷயங்களைச் செய்யாதபடி நாம் எவ்வாறு கவனமாக இருக்கலாம்?**

---

# மேலும் படிக்க:

'இயேசுவைப்பற்றி மாற்கு 1 சித்திரிக்கிற காட்சி என்ன? சீடர்கள் ஏற்படுத்த இயேசு வுக்கு அதிகாரமிருந்தது; அவர்கள் அதற்கு இணங்கிவந்தார்கள். சாத்தானின் கீழிருக்கிற அசுத்த ஆவிகளுக்கு நேர் எதிராக அவர் பரிசுத்தமுள்ளவர். நன்மைக்கும் தீமைக்கும் இடையே மிகப்பெரிய யுத்தம் நடைபெற்று வருகிறது; பிசாசுகளைவிட இயேசுவுக்கு அதிக அதிகாரம் உள்ளது. வியாதியஸ்தர்கள்மேல் இயேசு மனதுருகினார்; அவர்களுக்கு உதவினார்; வேறு எவரும் அவர்களைத் தொடமுடியாத விதத்தில் அவர்களைத் தொட்டார்.

"தாம் நிறுவப்போகிற ராஜ்யத்தைப் பற்றியும், சாத்தானால் சிறைப்பட்டவர்களை விடு விக்கிற தம் ஊழியம்பற்றியும் ஜெபாலயத்தில் இயேசு பேசினார். அப்போது ஒரு பயங்கர அலறல் கேட்டு பேச்சை நிறுத்தினார். பிசாசு பிடித்த ஒருவன் கூட்டத்திலிருந்து முன்னால் வந்து, "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று சத்தமிட்டான்.

'திரும்பின இடமெல்லாம் குழப்பமும் திகிலுமாக இருந்தது. மக்கள் கவனம் கிறிஸ்து விடமிருந்து திரும்பியது; அவர் பேசுவதைக் கேட்கவில்லை. சாத்தான் தன்னால் பாதிக்கப் பட்டவனை ஜெபாலயத்திற்குச் செல்ல வைத்ததற்கு அதுதான் காரணம். ஆனால் இயேசு அந்தப் பிசாசைக் கடிந்துகொண்டு, "நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ" என்று அதை அதட்டினார். உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்த மிட்டு, அவனை விட்டுப் போய்விட்டது. வனாந்தரச் சோதனையில் சாத்தானை நேருக்கு நேராகச் சந்தித்தவர், மீண்டும் தம் எதிரியை நேருக்கு நேராகச் சந்தித்தார். பிசாசு தன்னால் பாதிக்கப்பட்டவனை தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க தன் வல்லமை முழுவதையும் பிர யோகித்தது. அங்குக் கட்டுப்பாட்டை இழப்பது இயேசுவுக்கு வெற்றியைக் கொடுத்ததாகி விடும் ஆனால் இரட்சகர் அதிகாரத்தோடு பேசி, பாதிக்கப்பட்டவனை விடுவித்தார்".

அதேநேரத்தில், தம் ஊழியத்தை மும்முரமாகச் செய்தார்; ஒவ்வோர் இடமாகச் சென் றார்; கிட்டத்தட்ட எல்லா மக்களோடும் தொடர்பில் இருந்தார். ஊழியத்தையும் மக்களையும் எவ்வாறு அவரால் அமைதியாகவும் தடுமாற்றமின்றியும் அணுகமுடிந்தது? அவருடைய அனு தின ஜெப அனுபவத்தால் என்பதில் சந்தேகமில்லை. ஜெபம் செய்யவும், வேதவசனங்களை ஆராயவும் நடைமுறை ரீதியான ஓர் அட்டவணையை எவ்வாறு உருவாக்கலாம்? எது உங் களுக்கு சரியாக இருக்கிறதெனப்பாருங்கள்; அமைதலான ஆவியைப்பெறவும், ஆவியாலும் தேவ வார்த்தையாலும் வழிநடத்தப்படவும் அந்த நேரத்தைப் பயன்படுத்துங்கள்.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபத்தின் முக்கியத்துவம்பற்றி வகுப்பில் பேசுங்கள். ஜெபத்தின் நோக்கம், பயன்பற்றி மக்களிடம் காணப்படுகிற கேள்விகள் என்ன?*

**2** *சில நேரங்களில், நம் விசுவாசம்பற்றி அதிகமாகப் பேசாமல் இருப்பது நல்லதாக இருக்கும்; அத்தகைய சூழல்கள் பற்றி வகுப்பில் பேசுங்கள். எப்போது அது விவேகமாக இருக்கும்; நம் சாட்சியில் சமரசமாகாமல் அதை எவ்வாறு செய்யலாம்?*

**3** *இன்று உங்கள் கலாச்சாரத்தில் உள்ள 'குஷ்டரோகிகள்' யார்? அவர்களுக்கு சுவிசே ஷத்தைக் கொண்டுசெல்ல, உங்கள் சபை எவ்வாறு அணுகலாம்; 'தொடலாம்'?*

# பீதியடைந்த ஷாமன், பகுதி 2

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

நேப்பாளத்தில் தன் மகள் திவ்யா வீட்டில் அப்பா பல நாட்கள் தங்கியிருந்தார். ஷாமன் வேலையும், கட்டிட வேலையும் அவரைச் சோர்வடையச் செய்திருந்தன.

திவ்யாவின் சபை போதகர், பல விசுவாசிகளுடன் வீட்டிற்கு வந்திருந்தார். தன் மகளின் கடவுளான இயேசுவைப் புகழ்ந்து அவர்கள் பல பாடல்கள் பாடுவதை அப்பா ஆச்சரியத்தோடுபார்த்தார். பிறகு போதகர் வேதாகமத்தைத் திறந்து, “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று இயேசு அழைப்பதை வாசித்தார். மத் 11:28. அந்தக் கடவுளைப்பற்றி அறிந்துகொள்ள அப்பாவின் மனதில் ஏக்கம் உண்டானது. பிறகு போதகர், ‘தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்’ என்று வாசித்தார். யோவான் 3:16. அப்பாவின் உள்ளம் தொடப்பட்டது. மனிதர்களை இரட்சிக்க தம் ஒரே பேரான குமாரனையே கொடுத்த ஒரு கடவுளைப் பற்றி இதுவரை அவர் கேள்விப்பட்டதே இல்லை. தேவன் தம் குமாரனை இறுதிப் பலியாக அனுப்பியதால், மிருகப்பலி தேவையில்லை என்பது அவருக்குப் புரிந்தது.

போதகர் சென்றபிறகு, திவ்யாவிடம் ஒரு வேதாகமத்தை அப்பா கேட்டார். அந்த இரண்டு வசனங்களையும் அதில் வாசிக்கவேண்டும் என்கிற ஆவல். ஆனால் வசனத்தைத் தேடி எடுக்க முடியவிலை. திவ்யாவாலும் எடுக்க முடியவில்லை. அதனால் போதகரை அழைத்தாள். வசனங்களை எவ்வாறு தேடவேண்டுமென போதகர் சொல்லிக்கொடுத்தார். அப்பாவுக்கு சந்தோஷமாக இருந்தது; தினமும் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தார். ஓய்வுநாளில் திவ்யா மற்றும் தன் மனைவியுடன் ஆலயத்திற்குச் சென்றார். ஆலயத்திலோ வேதாகமத்திலோ அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு, தன் மனைவியை திவ்யாவிடமே விட்டுவிட்டு, பகத்திலிருந்து நகரத்திற்குத் திரும்பியபோது, வேதாகத்தை தன்னுடன் கொண்டுசென்றார்.

வீட்டிற்குச் சென்றபிறகு, ஷாமனாகவும், பகலில் கட்டிடப் பணியாளராகவும் வேலை செய்யத் தொடங்கினார். இரவில் வேதாகமத்தை வாசித்தார். மாதங்கள் கடந்தன. ஆவிகளை வழிபடவேண்டும் என்கிற ஆசை மறைந்தது. ஷாமன் வேலையை விட்டுவிடத் தீர்மானித்தார். “என் வாழ்க்கை மாறிவிட்டது. இனி இந்தச் சடங்குகளைச் செய்ய விரும்பவில்லை” என்று அந்த நகர மக்களிடம் சொன்னார்.

அப்பா ஒரு கிறிஸ்தவராக மாறியதை அறிந்த நகர மக்கள் கடும் கோபமடைந்தார்கள். தன் மூதாதையர்களுக்கு அவர் தீங்கு செய்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார்கள். அப்பா கவலைப்பட வில்லை. ஒரே தேவனை தான் கண்டுகொண்டதாக நிச்சயமாக நம்பினார்.



இன்று, அம்மாவும் அப்பாவும் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் விசுவாசிகளாக இருக் கிறார்கள். அப்பாவின் பெயர் கிருஷ்ணா லாமா; 66 வயதாகிறது; சபை உதவியாளராக இருக்கிறார்.

“என் மூதாதையர்கள் வசித்த இடம்தான் என் வீடு என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போது சபை தான் என் வீடு”.